**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 243/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.**5 |
| Name | : | **பாஸ்கரன் (தொழிலாளர் உதவி ஆணையர்)** |
| Father's / Husband Name | : | முத்துராஜ் |
| Address | : | பெரம்பலூர் |
| Age | : | 59/2025 |

**<u>தேதி : 16.04.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தொழிலாளர் உதவி ஆணையராக (சமூக பாதுகாப்பு திட்டம், பெரம்பலூர்) பணிபுரிந்து வருகிறேன். சம்பவ காலத்தில் நான் தொழிலாளர் உதவி ஆணையராக (அமலாக்கம், பெரம்பலூர்) பணி செய்துவந்தேன். அ.சா. 1 முதல் அ.சா. 4 வரையிலானவர்களை எனக்கு தெரியும். எதிரியை எனக்கு ஞாபகமில்லை. 08.06.2020 அன்று காலை Child Line வேலை செய்யும் திவ்யா , பட்டு, சத்தியராஜ் ஆகியோர்கள் எனக்கு போன் செய்து கொத்தடிமையாக சிறுவர்கள் வேலை செய்வதாக தெரிந்துகொண்டு அவர்களை டீம்மாக சென்று பிடிக்கவேண்டும் என்று தகவல் சொன்னார்கள். என்னுடைய அலுவலகத்திலிருந்து நானும், தொழிலாளர் உதவி ஆய்வாளர் சாந்தி அவர்களும் சென்றோம். எங்களோடு கோட்டாட்சியர், வட்டாட்சியர், வி.ஏ.ஓ. மற்றும் Child Line Member ஆகியோர்களும் சத்திரமனைக்கும், பொம்மனப்பாடிக்கும் இடையே உள்ள மலையடிவாரத்திற்கு சென்றோம். அங்கே 20, 30 செம்மறியாடுகள் மேய்ந்துகொண்டிருந்தது.

அந்த ஆடுகளை இரண்டு சிறுவர்கள் மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களை விசாரித்தபோது ஒரு சிறுவனின் பெயர் முருகன், வயது 13, இராமநாதபுரம் என்றும், மற்றொரு சிறுவனின் பெயர் மதி, வயது 10, கருடாமங்களம் என்றும் சொன்னார்கள்.

அந்த சிறுவர்களை கண்ணன் என்பவர் அவர்களுடைய பெற்றோர்களிடம் பணம் கொடுத்து அழைத்துவந்ததாகவும், ஆட்டுப்பட்டியில் தங்கிகொண்டு ஆடு மேய்ப்பதாகவும், அவர்களுக்கு கண்ணன் சாப்பாடு கொடுப்பதாகவும் சொன்னார்கள். சிறுவர்கள் இருவருக்கும் அவர்களுடைய பெற்றோர்களிடம் கண்ணன் என்பவர் ரூ. 60,000/– கொடுத்து அழைத்துவந்ததாக சொன்னார்கள். மேற்படி இரண்டு சிறுவர்களையும் நாங்கள் மீட்டு வந்து Child Welfare Committee யில் ஒப்படைத்தோம். கிராம நிர்வாக அலுவலர் சசிகலா என்பவர் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நாங்கள் சென்ற இடத்தில் ஆட்டுப்பட்டிகள் இருந்ததா என்றால் இல்லை. எனக்கு 08.06.2020அன்று காலை 11.00மணிக்கு திவ்யா அவருடைய செல்போனிலிருந்து எனக்கு தகவல் சொன்னார். திவ்யா எனக்கு போன் செய்து சொன்னதை போலீஸார் விசாரணையில் நான் சொல்லவில்லை. சம்பவ இடத்திற்கு 08.06.2020 அன்று சென்றேன். என்னுடன் வந்த தொழிலாளர் ஆய்வாளர் திருமதி. சாந்தி அவருடைய செல்போனில் போட்டோ எடுத்தார். சம்பவ இடத்திற்கு மாலை சுமார் 3.00மணிக்கு சென்றோம். சம்பவ இடத்தில் ஒரு மணி நேரம் இருந்தோம். சிறுவர்களை நான் நேரடியாக விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அந்த விவரத்தை நான் போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை. நான்சம்பவ இடத்திற்கு தோராயமாக 5 வாகனங்களில் சென்றோம். போலீஸார் என்னை சம்பவ இடத்தில் வைத்து 08.06.2020 அன்று விசாரித்தார்கள், அதன்பிறகு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ

இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், பொய்யாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.